

திருவாரூர் அருகே இருசக்கர வாகன விபத்தில் சிக்கி மூளைச்சாவு அடைந்த தமிழ்செல்வியின் உடல் உறுப்புகளை அவரது குடும்பத்தினர் தானம் செய்தனர் . மறைந்த அந்த பெண்ணின் உடலுக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி. கலைவாணன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு அரசின் சார்பில் மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

### மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# மயிலாடுதுறையில் மொழிப்போர் தியாகி சாரங்கபாணி நினைவு பாலம்!

## ரூ.6 கோடியில் சீரமைப்பு பணிகள்: அமைச்சர் சிவ வீ.மெய்யநாதன் ஆய்வு!

மயிலாடுதுறை, அக். 13 - மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் மயிலாடுதுறை கும்பகோணம் பிரதான சாலை காவேரி நகரில் சாரங்கபாணி நினைவு பாலம் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் காவிரி நகர் அருகே உள்ள ரயில்வே மேம்பாலம்1974 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முயற்சியால் கட்டப்பட்ட இரயில்வே மேம்பாலத்திற்கு மொழிப்போர் தியாகி சாரங்கபாணி பெயர் சூட்டப்பட்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் திறக்கப்பட்டு. 50 ஆண்டுகாலம் கடந்த நிலையில் பாலத்தை சீரமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது இந்த சீரமைப்பு பணியை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது, மயிலாடுதுறைமாவட்ட ஆட்சியர் தஎஸ்.ஸ்ரீகாந்த், மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க அன்பழகன் தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி எம் ஸ்ரீதர் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, முத்து.மகேந்திரன், இராம. இளங்கோவன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் மு. ஞானவேலன், எஸ். செல்வமணி, மாவட்டக் கழக பொருளாளர் மகா. அலெக்சாண்டர், ஒன்றிய கழக செயலாளர் என்.இளையபெருமாள், மூவலூர் எம். மூர்த்தி, ஞான.இளைய நாதன், ப. முருகமணி, ஏ.ஆர்.ராஜா, கு.வைத்தநாதன், மங்கை எம்.சங்கர், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமிர்த.விஜய குமார், பஞ்சு.குமார், மலர்வழிதிருமாவளவன், செல்லசேது ரவிக்குமார், ஏ.ஜி. ஜெ. பிரபாகர்,நகர கழக செயலாளர்கள் குண்டாமணி என்கின்ற என் செல்வராஜ் மாசுபராயன் பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், நத்தம் ஏ.வின்சென்ட், ஹர்ஷத், சங்கரநாராயணன், அ.காந்தி மற்றும் நகர கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பின்னர் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் மயிலாடுதுறையின் அடையாளமாக இருக்கின்ற சாரங்கபாணி இரயில்வே மேம்பாலமானது பழுதடைந்துள்ளது. உடனடியாக இதனை புதுப்பிக்க வேண்டும் என்ற அடிப்படையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடத்திலும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடத்திலும், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலுவிடத்திலும், கோரிக்கை வைக்கப்பட்டு, உடனடியாக மராமத்து பணிகள் மேற்கொள் வதற்காக ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

இப்பாலத்தை பொறுத்தவரையில் 1974 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முயற்சியால் கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளது. 50 ஆண்டுகாலம் கடந்திருக்கும் இந்த இரயில்வே மேம்பாலத்தில் பல கோடிக்கணக்கான வாகனங்கள் கடந்திருக்கின்றது. இந்த மராமத்து பணிகள் மிகவும் முக்கியமானது. ஏதேனும் விபத்து ஏற்படாத வகையில் இப்பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த மராமத்து பணிகளை பொறுத்தவரை பாலத்தில் உள்ள தூண்களை புதியதாக மாற்றப்பட உள்ளது. இரண்டு கைப்பிடிகளும் புதியதாக அமைக்கப்பட உள்ளது. 45தினங்களுக்குள் புதுப்பொலிவுடன் நமது மயிலாடுதுறை மாவட்டத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு இந்த இரயில்வே மேம்பாலம் அவர்களின் பயன்பாட்டிற்கு வர உள்ளது. மக்களின் கோரிக்கைகளுக்குக்கேற்ப இருசக்கர வாகனங்கள், ஆம்புலன்ஸ் போன்ற வாகனங்கள் செல்வதற்காக தற்காலிக பாதை அமைத்துத் தர ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வரும் 15 ஆம் தேதியிலிருந்து 20 ஆம் தேதி வரை ஒருவழி பாதையில் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வெளிமாநிலங்களிலிருந்து கொண்டு வரப்படும் நெல் கொள்முதல்கள்களை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மயிலாடுதுறை மாவட்டத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் நலன் கருதி அவை அனைத்தும் தடுக்கப்பட்டுள்ளது. உரிய முறையில் விவசாயிகளுக்கு தேவையான நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தேவையான நெல்லினை பாதுகாக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் பேட்டி அளித்தார்.




கோவை காந்திபுரம் குறுக்கு வெட்டு சாலையில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் கோவை வடக்கு கோவை தெற்கு கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேர்தல் தொகுதி பார்வையாளர்கள், பகுதி கழக பொறுப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் செந்தமிழ் செல்வன், மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, முனைவர் கணபதி ப.ராஜ்குமார் எம்.பி., டாக்டர் மகேந்திரன், வாசிம் ராஜா, தமிழ்மறை, கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ கல்பனா செந்தில், எஸ்.எம்.பி.முருகன், அசோக்பாபு ஆறுக்குட்டி உள்பட பகுதி கழக பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.




நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமானது, நீலகிரி கோத்தகிரி அரவேனு ஆல்பா ஜி.கே உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இம்முகாமினை அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு ஆகியோர் நேரில் பார்வையிட்டு பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகளை மருத்துவர்களிடம் கேட்டறிந்தனர். உடன் போஜன், நெல்லை கண்ணன், காளிதாஸ், சில்லபாபு மற்றும் ஃபாரூக் உட்பட கழக நிர்வாகிகள் மற்றும் மருத்துவர்கள் உள்ளனர்.

### கரூர் துயர சம்பவம்:

# உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு நிதி உதவி!

## தொல்.திருமாவளவன் எம்.பி. வழங்கினார்! வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. முன்னிலை!

கரூர், அக்.13 - தமிழ்நாடு வெற்றிக் கழகம் - விஜய் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா. ரூ. 50 ஆயிரம் நிதியை வி.சிக. கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. கரூர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில் பாலாஜி முன்னிலையில் வழங்கினார்.

கடந்த மாதம் 27ஆம் தேதி இரவு கரூரில் விஜய் பிரச்சார கூட்டத்தின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நிவாரண உதவியாக தலா ரூ.50 ஆயிரம் வழங்கும் நிகழ்ச்சி கரூரில் நடைபெற்றது. வி.ச.க. தலைவர் தொல் திருமாவளவன் தலைமை வகித்து 41 பேரின் குடும்பத்தினருக்கும் நிவாரண உதவிகளை வழங்கினார்.

கரூர் சட்டமன்ற உறுப்பினர், கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி முன்னிலை வகித்தார். பின்னர் தொல்.திருமாவளவன் எம்.பி. செய்தியாளர்களடம் கூறியதாவது,:

பாதிக்கப்பட்டவர்களில் சிலர் தங்களுக்கு அரசு வேலை வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். முதல்வரின் கவனத்திற்கு இதை கொண்டு செல்வோம் . பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிடும் வகையில் முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டார்கள் என்பதை நாடறியும். காயம் அடைந்தவர்கள், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரையும் உடனடியாக சந்தித்து நிவாரண உதவிகளையும் வழங்கியுள்ளார்கள். அதைப்போல முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி பாதிக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு நேரில் சென்று ஆறுதல் கூறியிருக்கிறார். நிவாரண உதவித் தொகையையும் வழங்கி இருக்கின்றார். இவ்வாறு அவர் கூறினார்.



மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவில் ஒன்றியம், பரசலூர் ஊராட்சியில் மாவட்ட ஆட்சி தலைவர் ஸ்ரீகாந்த் தலைமையில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில். மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் பேசினார். உடன் மாவட்ட உதவி இயக்குனர் பி.தியாகராஜன் மற்றும் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.பி. பவளவண்ணன்

### அக்டோபர் 13 (1975)



சென்னை, சைதை பகுதியில் இளம் வயதிலேயே தொண்டராக பணியாற்றி கழக வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர்.

தலைவர் கலைஞர்மீது மாறா அன்பும் பாசமும் கொண்டவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். பேச்சாளராகவும் விளங்கியவர்.

1964ல் சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினராகவும் – 1967ல் சென்னை மாநகர துணை மேயராகவும் பொறுப்பு வகித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### திருவாரூரில் விபத்தில் சிக்கி மூளைச்சாவு அடைந்த பெண்ணின்

# உடலுறுப்புக்களை தானம் செய்த குடும்பத்தினர்!

## பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் இறுதி அஞ்சலி !

திருவாரூர், அக்13. திருவாரூர் அருகே இருசக்கர வாகன விபத்தில் சிக்கி மூளைச்சாவு அடைந்த பெண்ணின் உடல் உறுப்புகளை அவரது குடும்பத்தினர் தானம் செய்தனர் . மறைந்த அந்த பெண்ணின் உடலுக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி. கலைவாணன்எம்.எல்.ஏ., தலைமையில் தமிழ்நாடு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது..

திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரி அருகே கரையாபாலையூர் ஊராட்சி ஆர்ப்பாவூர் பகுதியை சேர்ந்தவர் பன்னீர் செல்வம்.இவரது மனைவி தமிழ்செல்வி (45). இவர்களுக்கு மகன், மகள் உள்ளனர்.இந்த நிலையில் இரு தினங்களுக்கு முன்பு நடந்த இருசக்கர வாகன விபத்தில் தமிழ்செல்வி படுகாயமடைந்தார். சிகிச்சைக்காக திருவாரூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர், மூளைச்சாவு அடைந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர் .இதையடுத்து அவரது உடல் உறுப்புகளை தானம் செய்ய அவரது குடும்பத்தினர் முன்வந்தனர்.தமிழ் செல்வியின் இதயம், கிட்னி, கல்லீரல், 2 சிறுநீரகம் ஆகியன சென்னை, மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தொடர்ந்து மறைந்த தமிழ்செல்வி உடலுக்கு மாவட்ட செயலாளர் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ.தலைமையில் அரசு மரியாதை வழங்கப்பட்டு, மவுன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.கோட்டாட்சியர் சத்யா, மருத்துவ கல்லூரி முதல்வர் அசோகன் மற்றும் சமூக அமைப்பின் பிரதிநிதிகள்,உறவினர்கள் நிகழ்வில் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராயபுரம் ப. பொன்னுரங்கம்

### அக்டோபர் 13 (1989)



பள்ளிப் பருவத்திலேயே திராவிட இயக்க கொள்கையினால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் உறுப்பினராக சேர்ந்தவர்.

இராயபுரம் பகுதிக் கழகச் செயலாளராகவும், கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

இராயபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர்.

இந்தித் திணிப்பை எதிர்த்து நடைபெற்ற அறப்போராட்டம், விலைவாசிய உயர்வு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1986ஆம் ஆண்டு மத்திய அரசின் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து அரசியல் சட்டப்பிரிவை தீயிட்டு எரித்ததால் சட்டமன்ற உறுப்பினர் பதவியை இழந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**